மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுகிறது என்பதை நான் மறுக்கவில்லை. இந்த முறையற்ற பாசனத்தின் மூலம் அன்-ஆதரைஸ்டு பம்புசெட்டுக்காரர்கள் தண்ணீரை அவர்கள் வயலுக்கு பாய்ச்சினால்கூட பரவாயில்லை. அடுத்து இருக்கிற வயலுக்கு தண்ணீரை விற்கிறார்கள். அதுவும் அரசுக்குத் தெரியும். நான் மாண்புமிகு உறுப்பினர் கணேசமூர்த்தி அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நாளைக்கு மறுதினம்கூட அரசு 24 மணிநேரத்தில் அதை கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர்களே, நாளைக்கே படை எடுத்து, வந்து கணேசமூர்த்தியை பார்த்து. இந்த முறை எப்படியும் எங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் பயிர்கள் காய்கின்றன என்று அவர்கள் வருவார்கள், அதற்கு அரசாங்கத்திற்கு வந்து விண்ணப்பிப்பதற்கு நிறைய பேர்கள் இருக்கிறார்கள். எனவேதான் இதுகுறித்து அவர்களுக்குத் தெரிவித்து யாருக்கும் பாதகம் ஏற்படாத வண்ணம், விவசாயிகள் பாதிக்காத வண்ணம் ஒரு முடிவினை அரசு மேற்கொள்ள இருக்கிறது.

மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி.

* 3905 திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாட்டில் நிலவும் மின் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசின் உதவி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 630 மெ.வா. திறன் கொண்ட கடலூர் அனல் மின் நிலையம், 420 மெ.வா. திறன் கொண்ட சென்னை அனல் மின்நிலையம் இரண்டாவது கட்டம் மற்றும் 196 மெ.வா. திறன் கொண்ட கடலூர் வாயு சுழலி மின் திட்டம் ஆகியவற்றிற்கு உடனடியாக அனுமதியளிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காவிரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை வாயு முழுவதையும் மின் உற்பத்திக்கு அளிக்க வேண்டுமென மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

1990 மே 10]

9-45 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மின் உற்பத்தித் தேவையையொட்டி மின்சார வினியோக நிலையங்களில் ஏற்படும்படியான இழப்பை 'லைன் லாசை' கண்டுபிடித்துத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : என்னென்ன திட்டங்களுக்கு மத்திய அரசினுடைய உதவியை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. அதற்கு விடையளித்திருக்கிறேன் பாதையிலே ஏற்படுகின்ற மின் இழப்பைப் பற்றி கேட்டிருக்கிறீர்கள். நாளைக்கும், நாளை மறு தினமும் அதுபற்றிப் பேசுவோம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏராளமான அளவில் இந்த இழப்பு ஏற்படுவது என்பது யதார்த்தமான உண்மை. மின்சாரம் வழிகளில் திருடப்படுகின்றது. தவறான வழிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது. இவைகளைத் தடுத்தால் ஐந்தில் ஒரு பகுதி மின்சாரம் அரசுக்கு கிடைக்கும் என்று கூறுகிறார்களே, அதற்கு அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இனியாவது மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினருடைய அந்த யோசனையை அரசு பரிசீலிக்கும். நாளையும், நாளை மறுதினமும் நடக்கும் விவாதத்தில் அதுபற்றி நாம் பேசலாம்.

காடம்பாறை மின் உற்பத்தி திட்டம்.

* 4529 திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காடம்பாறை மின் உற்பத்தித் திட்டம் உற்பத்தியை தொடங்கிவிட்டதா?

(ஆ) இதன் மொத்த உற்பத்தித் திறன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 4x100 மெ.வா.